உலகநாதன், அழகர்சாமி ஆகியவர்கள் சிவகாசி சப்-கலெக்டரைச் சந்தித்து கிராமங்கள் தோறும் நியாயவிலைக் கடைகள் திறந்து 12 அவுன்சில் அரிசி போட வேண்டுமென மகஜர் கொடுத்தனரா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) அரிசி இருப்பு குறைவாக இருப்பதால், கிராமங்களில் 'வாரந் தோறும் ஒருவருக்கு 1,200 கிராம் அரிசி வீதம் பகிர்ந்தளிக்க இயலவில்லை யென அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இந்த வருடத்தில் வழக்கத்திற்கு மாருக, மேற்கு ராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக சாத்தூர் தாலுக்கா வறட்சியடைந்த நிலையில், பயிரெல்லாம் கருகிவிட்டதால் மக்கள் மிகவும் உணவுக் கஷ்டத்தில் இருக்கிருர்கள். ஆகையால் மற்ற எந்தவிதமான சங்கடங்கள் இருந்தாலும் கூட, அந்த இடங்களில் நியாய விலை' கடைகள் திறக்க சர்க்கார் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதிருக்கிற நம்முடைய நிலைமைகளை வைத்துத்தான் இந்த நிலை மேற்கொள்ளப்பட்டது. இப்போது, அந்தப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற, எதிர்பாராத நிலைமைகளைச் சர்க்கார் ஆராய்ந்து, கவனித்து, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை பற்றிப் பரிசீலித்து வருகிறது. தேவையான சாத்தியக் கூறுகள், காரணங் கள் இருக்குமானுல் இவைகளைச் செய்ய அரசாங்கம் ஒருக்காலும் தயங்காது.

Hydro-Geological Surveyors

*** 154 *Q*.—THIRU M. SANKARALINGAM PILLAI :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any hydro geological surveyors are working in the Agriculture Department ; and

(*b*) if so, the number of such surveyors and the names of districts in which they are working ?

நிலத்தினுள் நீரோட்டம் இருப்பதைக் காணும் ஆராய்ச்சி அதிகாரிகள்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விணுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிலத்தினுள் நீரோட்டம் இருப்பதைக் காணும் ஆராய்ச்சி அதி காரிகள் விவசாயத் துறையில் செயல்படுகின்றனரா ?

(இ) ஆம் எனில், எத்தனை அதிகாரிகள் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுகின்றனர் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, இந்தப் பருவ கால மழை அடிக்கடி பொய்த்து விடுகிறது. ஆகவே நிலத்தினுள் ஓடும் நீரைப் பயன்படுத்திக்கொள்ள கிணறுகள் வெட்டக் கடனுக பணம் கொடுக்கும்போது, நீரோட்டம் எங்கிருக்கிறது என்று காண அரசாங்கத் திலிருந்து சில நிபுணர்களை போடுவது தான் சிறப்பாக அமையும். அது இல்லாமல் ஜோசியம் சொல்வது போல சிலர் சொல்லி, விவசாயிகளை ஏமாற்றிக்கொண்டு இருக்கிருர்கள். ஆகவே அதை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அரசாங்கமே அத்தகைய நிபு ணர்களை நியமித்துக் கொடுத்து அவர்கள் சொல்லியதில் தண்ணீர் கிடைக்கா விட்டால், அதற்குண்டான செலவுகளை விவசாயிகள் கேட்கும் நிலை உண்டா

கும். அதனால் தான் அதை யோசிக்கவில்லை. விவசாய அதிகாரி ஒரு வர் விஸ்வநாதன் என்பவர் இந்தத் துறையில் அனுபவம் உள்ளவராக இருக்கிறார். ஆடுதுறையில் பணியாற்றும் போது, அவர் இந்த முறையைப் பயன்படுத்தினார். அவர் இப்போது லீவில் இருக்கிறார்.

திரு. கே. ராஜாராம் : நேற்று மாலை பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். சென்னையை ஒட்டி, பூமிக்கு அடியில் உள்ள நீர் நிலைகளை ஆராய்வதற்காக ஐக்கிய நாடு ஸ்தாபனத்தின் உதவி பெற்று பலர் ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று இருக்கிறது. அவற்றை விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாமா, வேறு வகைகளில் உபயோகிக்க முடியுமா என்பதை அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் சொல்லும் யோசனை கருத்தில் கொள்ளப்படும். தனிப்பட்ட பலர் இந்த தண்ணீர் ஓட்டத்தைக் கண்டுபிடிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் நான்கு பேர்கள், டி. எஸ். வேதபுரி முதலியார், கடலூர், டி. எஸ். குப்புசாமி, சென்னை, கோவிந்தசாமி, செஞ்சி, காளிமுத்து பிள்ளை, தாம்பரம் என்பவர்கள். ஏற்கனவே சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கிராமக் குடிநீர் திட்டத்தின் கீழ் ஒரு கிணறு தோண்டுவதற்கு 25 ரூபாய் ஊதியம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய பணி பல இடங்களில் சிறப்பாக இருந்து வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : இப்போது சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டவர் என்று ஒருவர் எங்கள் பகுதியில் வந்து ஒரு இடத்தைக் காட்டி தோண்டச் சொன்னார். அதில் 500 அடி தோண்டியதும் தண்ணீர் இல்லை. மற்றொரு இடத்தைக் காட்டினார். அதிலும் அதிக ஆழம் தோண்டி பார்த்ததில் தண்ணீர் வரவில்லை. இப்படி வீணாகிறது. அதனால் விஞ்ஞான ரீதியில் கண்டுபிடிக்க ஏதாவது கருவிகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விஞ்ஞான ரீதியில் கருவிகள் ஒன்றும் இல்லை. அனுபவ ரீதியாகத்தான் கண்டுபிடித்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் எனக்குத் தெரிந்த வரையில் கடலூர் வேதபுரி முதலியாருக்கு அதிக கிராக்கி இருக்கிறது. ஒய்.எம்.சி.ஏ.யில் கடலூரில் தங்கியிருக்கிறார். எந்தப்பகுதிக்கு அழைத்தாலும் வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். பல விவசாயிகள் அவரைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : ஏற்கனவே இருந்த தொழிலமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் ஓடுகிற காவிரி நதியைப்போல, மூன்று மடங்கு தண்ணீர் பூமிக்கு அடியில் தஞ்சை மாவட்டத்தில் கண்டுபிடித்து, வேளாண்மைக்கு அதைப் பயன்படுத்தலாம் என்று ஒரு திட்டத்தை சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் அந்தத் திட்டத்தை அமல்செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றிய விவரமில்லை.

Agricultural and Veterinary Colleges Selections

*155 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether a statement containing the list of students selected to (1) Agricultural College and (2) Veterinary Colleges in Madras State during 1967, the marks which were secured by them in the Colleges and the marks awarded to them by the Selection Committees will be placed on the table of the House ?